NSW Department of Education

# தலைப் பேன் பற்றிய பெற்றொருக்கான ஆலோசனை
# Parental advice concerning head lice

பிள்ளையின் பெயர் ______________________ வகுப்பு ______________
Child's name Class

அன்புடைய பெற்றோர்/கவனிப்பாளருக்கு:

மேலே சொல்லப்பட்டுள்ள வகுப்பு/குழுவிலுள்ள சில மாணவர்களது கேசத்தில் ஈர்கள் அல்லது தலைப் பேன்கள் இருப்பதாக நாங்கள் சந்தேகிக்கிறோம் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க இதை எழுதுகிறேன்.

உங்கள் பிள்ளையின் தலையில் ஈர்கள் அல்லது பேன்கள் இருக்கின்றனவா என்று இன்று இரவு சோதித்துப் பாருங்கள். ஈர்கள் அல்லது பேன்கள் காணப்பட்டால், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள *'தலைப் பேன் சிகிச்சை முறைகள்'* எனும் தகவலேட்டில் பரிந்துரைக்கப்பட்டுள்ளவாறு சிகிச்சையைத் துவங்குங்கள்.

https://www.health.nsw.gov.au/environment/headlice/Pages/treatment.aspx எனும் 'NSW சுகாதாரத் துறை' வலைத்தளத்தில் தலைப் பேன் குறித்த மேலதிகத் தகவல்களைக் காணலாம். அல்லது https://education.nsw.gov.au/student-wellbeing/health-and-physical-care/health-care-procedures/conditions/head-lice எனும் திணைக்களத்தினரது வலைத்தளத்தின் வழியாகவும் இதைப் பெறலாம்.

மேலதிக தகவல் தேவைப்பட்டால், தயவு செய்து பாடசாலை அதிபரை அழையுங்கள். பாடசாலை அதிபருடன் தொடர்புகொள்ள மொழிபெயர்ப்பாளர் உதவி தேவைப்பட்டால், தயவு செய்து 'தொலைபேசி மொழிபெயர்ப்பாளர் சேவை'யினை 131 450 எனும் இலக்கத்தில் அழைத்து உங்களது மொழி பேசும் மொழிபெயர்ப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். உங்களது உரையாடலில் உதவுவதற்கென மொழிபெயர்ப்பாளர் ஒருவரை தொலைபேசி இயக்குனர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இச் சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படமாட்டாது.

இவ்விடயத்தில் உங்கள் உதவிக்கு நன்றி.

உங்கள் உண்மையுள்ள

பாடசாலை அதிபர் அல்லது அவரது சார்பு
Principal or Nominee